செய்தி வெளியீடு எண்: 616 நாள்: 23.12.2016

# செய்தி வெளியீடு

காஞ்சிபுரம் மாவட்டத்தில் வர்தா புயலால் பாதிக்கப்பட்ட கிராமங்களை மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி அவர்கள் 22.12.16 அன்று ஆய்வு செய்தார்கள்.

காஞ்சிபுரம் மாவட்டம் வர்தா புயலினால் பாதிக்கப்பட்ட காந்லடைகளுக்கான இலவச மருத்துவ சிகிச்சை முகாம்களை மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அவர்கள், படப்பை அருகில் உள்ள வஞ்சுவான்சேரி மற்றும் திருத்தவேலி ஆகிய கிராமங்களில் முகாம்களை துவக்கி வைத்து விவசாயிகள் மற்றும் துறை அதிகாரிகளுடன் ஆய்வு செய்தார்கள். இதுவரையில் பாதிக்கப்பட்ட கிராமங்களில் 50 எண்ணிக்கையில் முகாம்கள் நடத்தப்பட்டுள்ளது.

இம்முகாமில் 312 கால்நடைகளுக்கு சிகிச்சையும் 200 கால்நடைகளுக்கு தடுப்பூசிகளும், 763 கால்நடைகளுக்கு குடற்புழு நீக்க சிகிச்சையும், 100 கிலோ இலவச தாதுஉப்பு கலவை பவுடர் மற்றும், கால்நடைகளுக்கு 1000 கிலோ இலவச பசுந்தீவன புல் ஆகியவற்றினை கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அவர்கள் விவசாயிகளுக்கு வழங்கினார்கள்.

மேலும், வர்தா புயலினால் பாதிக்கப்பட்ட கால்நடைகளின் எண்ணிக்கை குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துறை அதிகாரிகளிடம் கேட்டறிந்து உடனடியாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரண உதவிகள் வழங்கிட உத்தரவிட்டார்கள்.

வர்தா புயலினால் காஞ்சிபுரம் மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு தினந்தோறும் கால்நடை மருத்துவர்களின் குழு அனுப்பி, கால்நடைகளுக்கு சிகிச்சைகள் மேற்கொண்டு பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உதவிடுமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்கள்.

இந்நிகழ்வின் போது கால்நடை பராமரிப்பு (ம) மருத்துவப் பணிகள் இயக்குநர் திரு. த. ஆபிரகாம் இ.ஆ.ப., ஸ்ரீபெரும்பத்துார் சட்டமன்ற உறுப்பினர் திரு. கே. பழனி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. வாலாஜாபாத் கணேசன், மற்றும் உயர் அதிகாரிகள் உடனிருந்தனர்.

-----------

வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.